# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2257/54 - 2021 දෙසැම්බර් මස 09 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.12.09

*2257/54 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: - DSO/HOM/LAC/124.
காணி அமைச்சின் தொடர் இல.: 4-3/5/2019/CEB/110.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில், ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில், இல. 590 ஏ, மாகம்மன மேற்கு கிராம அலுவலர் பிரிவில், மாகம்மன எனும் கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளரினால் அளந்து வரையப்பட்ட இல. 520004-04-67 மற்றும் 2021.03.31 ஆந் திகதி வரைபடத்தில் காணித் துண்டு இல. 585 மற்றும் 586 என அடையாளப்படுத்தியுள்ள முழு விஸ்தீரணம் 0.0664 ஹெக்டாயர் கொண்ட கீழ்க் காணும் எல்லைக்குள் அமைந்துள்ள காணித் துண்டுகளின் விபரம் பின்வருமாறு:

*01.* **துண்டு இல. 585**

காணியின் பெயர்: அம்பகஹலந்த; விபரம்: தோட்டம்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: அரலிய லேண்ட் ஹோம்ஸ் (தனி) நிறுவனம்; விஸ்தீரணம்: 0.0354 ஹெக்டயார்.

*02.* **துண்டு இல. 586**

காணியின் பெயர்: அம்பகஹலந்த; விபரம்: தோட்டம்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: கடுவான, குலசிறிகுமாரகே மாவத்தை, 4 ஆம் ஒழுங்கை, இல. 323/4சீ எனும் விலாசத்தில் அமைந்துள்ள சுமித் கொதலாவல; விஸ்தீரணம்: 0.0310 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆண்டு சனவரி மாதம் 28 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு ஹோமாகம பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பீ. ஏ. டீ. சிந்தக,
பிரதேச செயலாளர்,
ஹோமாகம.

பிரதேச செயலகம்,
ஹோமாகம.
2021, திசெம்பர் 06.

EOG 12 - 0095


1A - G 35542 - 15 (2021/12) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*